செ.வெ.எண்-38 நாள்-23.07.2021

# பத்திரிக்கைச் செய்தி

## பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

புதியதாக தொழில்களை துவங்கி வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், ஊரக மற்றும் நகர்புற பகுதிகளில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை தொழில் முனைவோராக்கிடவும் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு மாவட்ட தொழில் மையம் (DIC), கதர் கிராமத் தொழில்கள் ஆணையம் (KVIC) மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியம் (KVIB) ஆகிய அலுவலகங்கள் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் குறு, சிறு தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு, அதன் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் 2021-22 ஆம் நிதியாண்டிற்கு அரியலூர் மாவட்டத்திற்கு 33 பயனாளிகளுக்கு மானிய தொகையாக ரூ.100.00 இலட்சம் இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் 18 வயது பூர்த்தியடைந்தவராக இருக்கவேண்டும். திட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் மற்றும் அதற்கு மிகைப்படும் உற்பத்தி தொழில்களுக்கும், திட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் மற்றும் அதற்கு மிகைப்படும் சேவை தொழில்களுக்கும் விண்ணப்பதாரர் 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் உச்சவரம்பு ஏதும் இல்லை.

உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு ரூ.25.00 இலட்சம் வரையிலும், சேவை சார்ந்த தொழில்களுக்கு ரூ.10.00 இலட்சம் வரையிலும் கடன் தொகையாக வழங்கப்படுகிறது.

மேலும், திட்ட முதலீட்டில் விளிம்புத் தொகையாக பொது பிரிவினர் 10 சதவீதமும், சிறப்பு பிரிவினர் (பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / பெண்கள் / மாற்றுத் திறனாளிகள் /முன்னாள் இராணுவத்தினர் / தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் மற்றும் திருநங்கைகள்) 5 சதவீதமும் செலுத்த வேண்டும்.

தற்போது **COVID-19** காரணமாக விண்ணப்பங்கள் 30.09.2021 வரையிலான காலத்திற்கு நேர்முக தேர்வின்றி வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும்.

எனவே, இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர் விண்ணப்பங்களை https://www.kviconline.gov.in/pmegpeportal/jsp/pmegponline.jsp என்ற இணையதளம் மூலம் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும் என்றும், மேலும் விவரங்களுக்கு பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், வாலாஜா நகரம், அரியலூர் அலுவலகத்தை நேரடியாகவோ அல்லது 04329-228555 / 8925533925 / 8925533926 என்ற தொலைபேசி எண் வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம் என அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**